**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.64/2020**

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 02.04.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ் | ஜாதி | : |
| த/பெயர் | : கலியபெருமாள் | மதம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| வட்டம் | : | வயது | : |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்தானது எனது தகப்பனாருக்கு சொந்தமானதாக இருந்து அவரால் எனக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு உரிமையானது என்று சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரிடம் பல ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து அனுபவத்தில் இருந்து வந்தது. கடந்த 2018 வருடத்திற்கு முன்பு தாவா சொத்துக்கள் எனது தகப்பனாரின் அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வந்தது என்பதற்கு தொடர்ச்சியான ஆவணங்களும் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்து எனது தகப்பனாரின் அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் தான் எனது தகப்பனார் பெயரில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் சாட்சியாக உள்ள பார்வதி என்ற கையொப்பம் எனது அம்மாவின் கையெழுத்து ஆகும். மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் நானும் கையொப்பம் செய்துள்ளேன். சார்பதிவாளர் அலுவலகத்திலும் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் எனது தகப்பனார் உடல் நலம் சரியில்லாமல் இருந்தாரா என்றால் வாய் பேசமுடியாமலும், காது கேட்காமலும் இருந்துவந்தார். நானும் எனது தாயாரும் சேர்ந்து என்ன ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கப்படுகிறது என்பது குறித்து சொல்லாமல் அவரை கட்டாயப்படுத்தி வா.சா.ஆ.1 ஆவணத்தை எற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கு தகப்பனாருக்கு விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது தப்பனாரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி விசாரித்தால் வா.சா.ஆ.1 ஆவணத்தை குறித்து விவரம் சொல்லமுடியுமா என்றால் சைகை மூலமாக அவரால் சொல்லமுடியும். அவரை சாட்சியாக நீதிமன்றத்தில் விசாரிக்க தயாராக உள்ளேன்.

தாவா சொத்திற்கு பக்கத்தில் எனது தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.2 செல்வராஜ் என்பவருக்கு புல எண்.21எ/9பி சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தை பிரதிவாதியான ராணியின் மகன் சிவா என்பவருக்கு வா.சா.2 செல்வராஜ் கடந்த 22.07.2020 ல் கிரயம் செய்து கொடுத்துளளார் என்றால் சரிதான். அந்த கிரய பத்திரத்தில் கலியபெருமாள் புஞ்சைக்கு தெற்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது தகப்பனார் 2018 ல் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டதாக வா.சா.ஆ.1 ஆவணம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் செல்வராஜ் எற்படுத்தி கொடுத்த ஆவணத்தில் கலியபெருமாள் புஞ்சைக்கு தெற்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 2018 ல் உண்மையிலேயே எனது பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எற்படுத்தப்பட்டு தாவா சொத்தின் அனுபவம் எனது அனுபவத்தில் இருந்திருந்தால் எனது தகப்பனார் கலியபெருமாள் எனக் குறிப்பிடப்படாமல் எனது பெயரான ராஜேஷ் புஞ்சைக்கு தெற்கு எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. செல்வராஜ் ஏற்படுத்திக்கொடுத்த ஆவணத்தில் நான்கெல்லை தவறாக கொடுக்கப்பட்டுள்ளது. செல்வராஜ் கிரய சாசனம் ஏற்படுத்திக் கொடுத்த காலத்தில் தாவா சொத்து எனது அனுபவத்தில்

இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் மாமனார் மாயகிருஷ்ணன் என்றால் சரிதான். மாயகிருஷ்ணன் என்பவருக்கு தாவா சொத்திற்கு அருகில் புல எண்.221 எ/1, 221 எ/2, 221 பி/1 ஆகிய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான்.

தாவா கிராமத்தில் கிராம கமிட்டி உள்ளது என்றால் சரிதான். கடந்த 2020 ல் தாவா சொத்து தொடர்பாக கிராமத்தில் சமாதானம் பேசப்பட்டது அதில் எனது தாயார் கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதா்ன. ஆனால் நான் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதாக கையொப்பம் செய்து கொடுத்தேன். சமாதானத்திற்கு ஒப்புக்கொண்டதாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை. சாதாரணமாக கிராமத்தில் கூட்டம் நடந்தால் கிராம கமிட்டி மினிட் புக்கில் என்ன பிரச்சனை குறித்து பேசப்பட்டது என்ன முடிவு எடுக்கப்பட்டது குறித்து எழுதுவார்கள் என்றால் சரிதான். கிராமத்தில் 23.06.2020, 28.06.2020 தேதிகளில் சமாதானம் பேசப்பட்டதாக மினிட் புக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மினிட் புக்கில் தாவா சொத்துக்கள் மாயகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமானதாக இருந்து அதன்பிறகு பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் அனுபவத்தை ஒப்புக்கொண்டு நானும் எனது தாயாரும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

அதே கூட்டத்தில் நஷ்ட ஈடாக பிரதிவாதி பணம் கொடுத்துவிட்டால் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு 6 அடி கீழ்புறமாக தெற்கு வடக்காக கொடுத்துவிட்டால் பிரச்சனை எதுவும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த மினட் புக்கை பார்த்தால் மேற்கண்ட விவரங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். (என்னிடம் காட்டப்படும் சொத்துக்கள் தாவா சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். அந்த புகைப்படத்தில் உள்ள பெண் யார் என்றால் பிரதிவாதி ஆவார்). தாவா சொத்துக்கள் பிரதிவாதியின் மாமனார் மாயகிருஷணன் காலத்திலிருந்து பிரதிவாதியின் குடும்பத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் மாயகிருஷ்ணன் அனுபவத்தில் தான் இருந்து வந்தது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள தென்னை மரங்கள் மாயகிருஷ்ணன் என்பவரால் பயிரிடப்பட்டது என்றாலும் அவரது மகன் இறந்துவிட்டதால் பிரதிவாதி வாரிசு என்ற முறையில் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. செல்வராஜ் சொத்தை பிரதிவாதி மகன் பெயரில் வாங்கியதற்கு பின்னிட்டு தாவா சொத்தை அபகரித்து விட்டார்கள். தாவா சொத்தில் கிணறு இருந்தது. அது இடிந்துவிட்டதால் தண்ணீர் இல்லாததால் நாங்கள் பராமரிப்பு எதுவும் செய்யவில்லை அதில் இருந்த தென்னை மரங்கள் பட்டு போய் விட்டது. மேற்கண்ட விவரங்கள் நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்னதாக பின்யோசனை செய்து பிரதிவாதியின் வழக்கு விவரங்களை மறுக்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. (என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தென்னை மரங்கள் சுமார் 40 வருடங்கள் வயதுயைடதாக இருக்கலாம்).

(பிரதிவாதி அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.04.02 17:27:38 +0530

District Munsif
Mannargudi.